OS. 29/2022.

**நாள். 24.06.2024.**

**வா.சா. 1 –** முராத் அலி, த/பெ.சாலிபு

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டார்....

<u>1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>

என் அம்மாவின் அப்பா பெயர் சுலைமான். சுலைமானின் அப்பா பெயர் அபுபக்கர் அம்பலம் என்று சொன்னால் சரியல்ல. என் தாயார் பெயர் ராபியா பீவி. அப்துல் பாரூக் என் அம்மாவின் சகோதரர் என்று சொன்னால் அவர் தூரத்து சொந்தமாக இருக்கலாம். கே.எஸ்.முகம்மது சுலைமான் என் தாய்வழி தாத்தா என்று சொன்னால் சரிதான். 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு வழக்குச் சொத்துக்கள் 1965 இல் பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் மூலம் பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. 1965 இல் பாத்தியம் என்ற விவரத்தை பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளதை நான் படித்துப் பார்த்தேன். அதை நான் மறுத்து பதில்உரை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அப்துல் சத்தார் என்பவர் எனக்கு தூரத்து சொந்தம். இந்த வழக்கில் 1 ஆம் இலக்க சொத்தில்தான் 2 ஆம் இலக்க சொத்து இருக்கிறது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் வழக்குச் சொத்துக்கள் தொடர்பாக பட்டாவை தவிர உரிமை தொடர்பான ஆவணங்கள் எதுவும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் செய்யது சுல்தானுக்கு எவ்வாறு பாத்தியம் என்பதற்கு எந்த ஆவணத்தையும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் சம்மந்தமாக 1956 ஆம் வருட சர்வே செட்டில்மென்ட் பதிவேட்டை நான் பார்க்கவில்லை. தாவா சொத்துக்கு 1956 ஆம் ஆண்டில் இருந்தே பிரதிவாதிகளின் முன் பாத்தியஸ்தர்கள் பெயரில் பட்டா தாக்கல் ஆகிவருகிறது என்று சொன்னால் சரியல்ல. 1965 க்கு பிறகு பிரதிவாதிகள் தாவா சொத்துக்களுக்கு தங்கள் பெயரில் பட்டா மாற்றிக் கொள்ளாததை பயன்படுத்தி வழக்குச் சொத்துக்களுக்கு தவறாக உரிமை கோருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை 2022 ஜனவரி 6 ஆம் தேதி சர்வேயர் மூலம் அளந்தோம், அப்போது பிரதிவாதிகளுக்கு நாங்கள் தகவல் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு சர்வேயர்

அளந்தபோது தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளின் அனுபோகத்தில் இருந்து வந்தன என்று சொன்னால் சரியல்ல. 2 ஆவது இலக்க சொத்து அரை சென்டுக்கு சற்று கூடுதலானது. 2 ஆம் இலக்க சொத்திற்கு தெற்கே பிரதிவாதிகளுடைய இடம் இருக்கிறது. 1 ஆம் இலக்க சொத்தும், 2 ஆம் இலக்க சொத்தும் ஒரே அடைப்புக்குள்தான் இருக்கிறது என்று சொன்னால் சரிதான், வாய்க்கால் போட்டார்கள் அதனால் ஆட்சேபனை செய்தோம். வாய்க்காலுக்கு கிழக்கு மற்றும் தெற்கில் பிரதிவாதிகளுடைய சொத்து இருக்கிறது. நீதிமன்றத்தில் இருந்து ஆணையர் வந்து வழக்கு சொத்துக்களை அளந்தபோது நான் அங்கு இருந்தேன். ஆணையரின் அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். அதற்கு நான் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை. ஆணையர் அறிக்கையுடன் ஒரு வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை பார்த்தேன். என்னிடம் காட்டப்படுவது அந்த வரைபடம் தான். ( நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தை பார்த்து சாட்சி சாட்சியம் சொன்னார்.) இந்த வரைபடத்தில் உள்ள விவரங்களை ஆட்சேபனை செய்து பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனையை நான் படித்துப் பார்க்கவில்லை. தாவா சொத்திற்கு தெற்கேயும், மேற்கேயும் எந்த அடைப்பும் இல்லை என்றும் கம்பி வேலி எதுவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல, ஓரளவுக்கு அடைத்துள்ளது. நாங்கள் அடைத்த இடத்தில் கொஞ்சம் விழுந்துள்ளது. நாங்கள் அடைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு 8 ½ சென்ட் சொத்துக்களின் ஓரங்களில் மரங்கள் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். இந்த மரங்கள் பிரதிவாதிகள் தரப்பினரால் 1965 லேயே வைக்கப்பட்ட மரங்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய நாளில் இருந்து வழக்குச் சொத்துக்கள் பிரதிவாதிகளின் அனுபோகத்திலேயே இருந்து வருகின்றன என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் கிரையம் பெற்று அனுபோகம் செய்து வந்த பிறகு நான் இந்த வழக்கை 55 வருடங்கள் கழித்து தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதனால் இந்த வழக்கு எந்த வகையிலும் நிலைக்கத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் எந்த காலத்திலும் வாதிகளின் அனுபோகத்தில் இருந்து வந்தது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளின் மீது ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை வாதிகள் எந்த காலத்திலும் ஆடுமேய்க்கும் இடமாக பயன்படுத்தியதில்லை என்று

சொன்னால் சரியல்ல. ஆடுகளை கட்டிவைக்கும் கொட்டம் எதுவும் வழக்கு சொத்துக்களில் இல்லை என்று சொன்னால் சரியல்ல, வேலி அடைத்திருக்கிறோம். அப்படி எதுவும் கிடையாது என்றும், அதனால் தான் ஆணையரின் அறிக்கையில் அதுபற்றி குறிப்பிடப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் வாதிகள் கோரியுள்ள எந்த பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.